**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 134 of 2024 |

Depositions of PW -5 witness for ________ { Prosecution / Defence / Court

Name : கோகுல்

Father's Name :சுப்ரமணியம்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd **day of July** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் அரசூரில் குடியிருந்து கொண்டு இருசக்கர வாகனங்கள் பழுது பார்க்கும் கடை வைத்துள்ளேன்.கடந்த 02.06.2024 ஆம் தேதி பிரபு எனக்கு போன் செய்து சேலம் வரை சென்று வர வேண்டும். ஆகவே என்னை தென்னம்பாளையம் வரச் சொன்னார். தென்னம்பாளையத்தில் எனது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு இருந்த பொழுது பிரபு என்பவர் ஒரு இருசக்கர வாகனத்திலும் ஜீவா என்பவர் மற்றொரு வாகனத்திலும் வந்தார்கள். நான் பிரபு என்பவருடன் வண்டியில் பின்னால் அமர்ந்து கொண்டேன். ஜீவா எங்களுக்கு முன்னால் அவர் இருசக்கர வாகனத்தில் சென்றார். நானும் பிரபுவும் பிரபுவின் இருசக்கர வாகனத்தில் அவருக்கு பின்னால் சென்றோம்.

2. கருமத்தம்பட்டி அருகே சென்ற பொழுது Mahindra xuv 300 கார் இடது புறமாக திரும்பிய பொழுது ஜீவாவின் வலது பக்க கண்ணாடி மீது பட்டு விட்டது. அப்பொழுது

பாலத்தின் மேல் சென்று கொண்டு இருந்ததால் ஜீவா நிலை தடுமாறி பாலத்தின் மேலிருந்து கீழே தூக்கி வீசப்பட்டார். உடனடியாக நாங்கள் பாலத்தின் கீழ் சென்று பார்த்த பொழுது அருகில் இருந்த மளிகை கடைக்காரரும் அங்கு வந்து பார்த்தார். அப்பொழுது ஜீவா ஹெல்மெட் மற்றும் ஜர்க்கின் அணிந்திருந்தார். உடலில் எங்கு அடிபட்டது என்பதை பார்க்க இயலவில்லை. உடனடியாக ஆம்புலன்ஸ் வந்து பரிசோதித்த நபர் ஜீவா இறந்துவிட்டதாக தெரிவித்தார். பின்னர் பிரபு ஜீவாவின் மாமாவிற்கு விபத்து குறித்து தகவல் சொன்னார். பின்னர் மற்றொரு ஆம்புலன்சில் ஜீவாவின் பிரேதத்தை ஆம்புலன்ஸில் ஏற்றி கருமத்தம்பட்டி காவல் நிலையம் சென்று விபத்து குறித்து தகவல் சொன்னார்.

3. காரை ஓட்டி நபரை சம்பவத்தின் பொழுது பார்த்தேன் ஆனால் அவர் முகம் எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை. ஆஜர் எதிரி போல் தான் தெரிகிறது. ஆனால் உறுதியாக என்னால் கூற இயலவில்லை. காரை ஓட்டிய நபர் உடுமலைப்பேட்டையை சார்ந்தவர் என காரை ஓட்டி நபரின் தந்தையிடம் கூறினார். பின்னர் என்னை விபத்து நடந்த இடத்தை போலீசார் அடையாளம் காண்பிக்க சொன்னார்கள். நான் அன்றைய தினமே மாலை 5 மணிக்கு சென்று விபத்து நடந்த இடத்தை அடையாளம் காண்பித்தேன். போலீசார் என் முன்னிலையிலும் மளிகை கடைக்காரர் சங்கர் அவர்கள் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் சங்கர் என்பவரும் சாட்சி கையொப்பம் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகசர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் கே பி ஆர் பொறியியல் கல்லூரியில் BE படித்துள்ளேன். பிரபு என்னுடைய ஒர்க் ஷாப்பில் அவரது இருசக்கர வாகனத்தை பழுது பார்ப்பதற்காக வருவார். அப்பொழுது எனக்கு பழக்கம். BMW வாகனம் எங்கள ஒர்க்ஷாப்பிற்கு பிரபு கொண்டு வருவார். அதையும் நான் பழுது பார்த்துள்ளேன். பிரபுவின் நண்பர்கள் வாகனமும் வேகமாக செல்லக்கூடிய வாகனங்கள் அதையும் நான் பழுது பார்த்து உள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்தில் இறந்து போன ஜீவா ஓட்டி விபத்துக்குள்ளான BMW வாகனத்தையும் சம்பவத்திற்கு முன்பாக ஒரு முறை ஆயில் சர்வீஸ் மட்டும் செய்துள்ளேன். நான் specialised vehicles bikes garage வைத்துள்ளேன் என்றால் சரிதான்.

2. BMW போன்ற வாகனங்கள் ஓட்ட எனக்கு பழக்கம் உண்டு என்றால் சரிதான். பிரபு என்பவரும் இது போன்ற வாகனங்களை ஓட்டுவார். பிரபு சென்னையை சார்ந்தவர் என என்னிடம் கூறியுள்ளார். ஜீவா தேனியை சார்ந்தவர் என்று கூறினார். ஜீவா என்பவரை சம்பவத்தின் பொழுது மட்டுமே பார்த்தேன். ஆனால் சம்பவத்தில் விபத்துக்குள்ளான வாகனத்தை ஏற்கனவே பழுது பார்க்கும் போது பார்த்து உள்ளேன். ஜீவா மற்றும் பிரபு இருவரும் வாகனங்களில் சாகசம்

செய்வார்கள் என்றால் சரியல்ல. ஆனால் வெகுதூரம் மற்றும் வாரம் நாட்களில் அதிக தூரம் பயணம் செய்வார்கள். பிரபு என்னிடம் எதற்காக ஜீவா கோயம்புத்தூர் வந்ததாக சொன்னார் என்றால் நண்பர்களை சந்திப்பதற்காக வந்ததாக சொன்னார்.

3. நானும் பிரபுவும் ஜீவா பின்னால் எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் BMW வாகனத்தில் சென்றோம். என்னை போலீசார் விசாரித்த பொழுது காரின் இடது புற உள்ள பின்புறம் பார்க்கும் கண்ணாடி ஜீவாவின் இருசக்கர வாகனத்தின் வலது ஹேண்டில் பாரில் இடித்ததாக சொன்னேன். விபத்திற்குள்ளான ஜீவாவின் வாகனத்தை விபத்தின் பின்பு நான் பழுது பார்க்கவில்லை. விபத்து ஏற்பட்டவுடன் நான் பாலத்தில் இருந்து நடந்து கீழே இறங்கி விட்டேன். ஜீவா வாகனத்தை எடுத்து மீண்டும் சர்வீஸ் ரோட்டில் வந்து சம்பவ இடம் வந்தார். விபத்து சம்பவத்தின் பொழுது நாங்கள் ஜீவா இருசக்கர வாகனத்தில் பின்னால் சென்றோம்.

4. விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் காரின் எந்தெந்த பகுதிகளில் சேதாரங்கள் ஏற்பட்டது என்றால்

1. ஹேண்டில் பார் மீது மோதியதில் காரின் இடது முன்பக்கம் உள்ள பின் பார்க்கும் கண்ணாடி CLOSE ஆகிவிட்டது.

2. காரின் இடது முன்பக்க கதவின் பக்கவாட்டில் கீறல் ஏற்பட்டது.

3. இடது முன்பக்க காரின் டயர் சேதாரம் ஆகிவிட்டது. ( FULLY DAMAGE ) மேற்கூறிய சேதாரங்கள் மட்டுமே நான் பார்த்தேன்.

5. கார் மோதி விபத்து ஏற்படவில்லை என்றும் விபத்தில் இறந்து போன ஜீவா அதிவேகமாக சென்று காரின் பக்கவாட்டில் மோதி நிலை தடுமாறி பாலத்தில் இருந்து கீழே விழுந்தார் என்றால் சரியல்ல. ஜீவானந்தத்தின் இருசக்கர வாகனத்திற்கு சம்பவத்தின் பொழுது பின் பகுதியில் எந்த சேதாரங்களும் ஏற்படவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்திற்கு முன் விளக்கு மற்றும் இடதுபுற ரேடியேட்டர் ஆகிய இடங்களில் சேதாரம் ஏற்பட்டது.

6. நான் தற்பொழுது கேரேஜ் மூடிவிட்டேன். இருந்த சமயம் மேற்படி கேரேஜ் இருந்ததற்கான புகைப்படம் மற்றும் வீடியோக்களை இணையதளங்களில் பதிவிட்டுள்ளேன். சம்பவம் நடந்த சமயத்தில் என்னுடைய கேரேஜ் இருந்தது. நாங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்காக STUNT செய்யும் பொழுது விபத்து ஏற்பட்டது என்றும் எதிரியின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

(**Sd**/-) **Thiru**. **T**. **Arunkumar**

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**